## அரசுப் பள்ளிகளில் மார்ச் 1 முதல் இன்று வரை

# 1 இலட்சத்து 56 ஆயிரத்து 290 மாணவர்கள் புதிதாக சேர்ந்திருக்கிறார்கள்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பெருமிதம்!



**சென்னை, ஏப். 26 -**

**பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் அ.தி.மு.க. உறுப்பினர் செங்கோட்டையன் பேசியதற்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதிலளித்து பேசியதாவது:**

சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர், செங்கோட்டையன் அவர்கள் அடுக்கடுக்கான பல கேள்விகளை, சந்தேகங்களை, கருத்துகளையெல்லாம் அவையின்முன் எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நீங்கள் எவ்வளவு ஆசிரியர்களை recruit செய்திருக்கிறீர்கள் என்று ஒரு கருத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்தபிறகு, PG teachers மட்டும் 3,087 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தாண்டில் 1,915 ஆசிரியர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள். BT teachers ஏற்கெனவே 3,192 ஆசிரியர்கள் தேர்வெழுதி, CV என்கிற Certificate Verification முடிந்த பிறகு, non teaching staffs 2 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று வழக்கு தொடரப்பட்ட காரணத்தால், அந்த நியமனம் நிலுவையில் இருக்கிறது. விரைவில் அதற்கான தீர்ப்பைப் பெற்று, அந்த இடங்களும் நிரப்பட விருக்கின்றன.

உங்கள் காலத்தில் Secondary Grade Teachers ஏறத்தாழ 11 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களைத் தேர்வு செய்கின்ற பணியைச் செய்த அரசு, திராவிட மாடல் அரசுதான். கிட்டத்தட்ட 2,768 ஆசிரியர்களுக்கான தேர்வு முடிந்து, இன்று அவர்களுக்கான Certificate Verification processல் அரசு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். BT teachersஐப் பொறுத்தவரையில், வருங்காலத்தில் 1,205 ஆசிரியர்களை நியமிப்பதற்கு timetable அமைத்து, திட்டமிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக Elementary enrollmentஐப் பொறுத்தவரையில் சொல்லியிருக்கிறீர்கள், மார்ச் 1ம் தேதி அன்று முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளன்று, அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக முழுவதும் தொண்டர்களும், அதிகாரிகளும் காத்திருந்தபோது, முதலமைச்சர் அவர்களின் car நேராக எங்கு சென்றதென்று கேட்டால், நேராக ஒரு அரசு பள்ளியைத் தேடித்தான் சென்றது. மார்ச் 1ம் தேதியன்று enrollmentக்கான 4 மாணவர்களை சேர்த்துவைத்து விட்டுதான் முதலமைச்சர் அவர்கள் தொண்டர்களையே பார்த்தார்கள். மார்ச் 1ம் தேதியிலிருந்து நேற்று காலை 1100 மணி வரையில், சேர்ந்திருக்கின்ற மாணவச் செல்வங்களின் எண்ணிக்கை, 1,56,290 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் அவர்கள் சொன்னார், இதுவரையில் Upgradationஐப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று குற்றச்சாட்டாக சொன்னார்கள். சொன்னது, நான் அல்ல, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவரிடமும் கூறினேன். சொன்னது நாங்களல்ல, சொன்னது CAG report. 525 பள்ளிக்கூடங்களில், 513 பள்ளிக்கூடங்கள் எந்த விதிமுறைக்கும் இல்லாத பள்ளிக்கூடங்களை நீங்கள் upgrade செய்திருந்தீர்கள். அவற்றிற்கும் சேர்த்த infrastructure மற்றும் அந்த பள்ளிகளின் ஆசிரியர்களுக்குமான ஊதியத்தையும் இன்றைக்கு இந்த அரசுதான் வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதைதான் அன்றைக்கு நான் சொன்னேன். Upgradation குறித்து சொல்லியிருக்கிறீர்கள். கண்டிப்பாக நல்ல அறிவிப்பு. என்னுடைய அறிவிப்புகளில் அது சார்ந்து கண்டிப்பாக வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10 ஆம் வகுப்பிற்கும், 12 ஆம் வகுப்பிற்கும் Examination Centreஐப் பொறுத்தவரையில், இந்த 4 ஆண்டுகளில் இதுவரைக்கும், புதிதாக 50 centres 10 ஆம் வகுப்பிற்கும், 74 centres 12 ஆம் வகுப்பிற்கும் அமைக்கப்பட்டு, கிட்டத்தட்ட almost அனைத்தும் stagnate ஆகிவிட்டன. நீங்கள் சொல்வதுபோன்று அனைத்து இடங்களிலும் வந்துவிட்டன. கள்ளக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று இன்றைக்கு 54 பிள்ளைகள்தான் இருக்கிறார்கள். தாகம்தீர்த்தபுரம் என்று நினைக்கிறேன். அந்த 54 பிள்ளைகளும் வருங்காலத்தில் 100 எண்ணிக்கையாக உயரும்போது, கண்டிப்பாக இவ்விடத்திலும் ஒரு examination centre கொண்டுவர முடியும். அதையும் இந்த அரசு செய்யும், உங்களுடைய தாகம் தீர்க்கப்படும் என்றுகூட நான் அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் எடுத்து சொல்லியிருக்கிறேன். Infrastructureஐப் பொறுத்தவரையில் அனைவருக்கும் தெரியும். Very first time முதலமைச்சர் அவர்கள் இனமான பேராசிரியரின் பெயரில் உள்ள பேராசிரியர் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில், 7,500 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, இதுவரைக்கும் ஏறத்தாழ, 3,527.5 கோடி ரூபாய் செலவு செய்து, இன்றைக்கு கிட்டத்தட்ட 8,306 வகுப்பறைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தாண்டில் 4,412 வகுப்பறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது இல்லாமல், நிதிநிலை அறிக்கையில், 1,000 கோடி ரூபாய் இந்தாண்டிற்கான நிதி இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு தொடர்ந்து அவற்றுக்கான infrastructureஐ செய்து கொண்டிருக்கிறது. CSR குறித்து தெரிவித்தீர்கள். 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியாக ரூ.5.00 இலட்சம் அளித்து ஆரம்பிக்கப்பட்டது. இதுவரைக்கும் பெறப்பட்டுள்ள நிதியின் அளவு மட்டும் 558.87 கோடி ரூபாய் ஆகும்.

அதுசார்ந்து, ஏறத்தாழ 12,603 பள்ளிக் கூடங்கள் பயன்பெற்றிருக்கிறது. Utilise செய்த amount மட்டும் ரூ.640 கோடி utilise செய்திருக்கிறோம். ரூ.18 கோடி மீதமிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி டிவியைப் பற்றி சொன்னீர்கள். கல்வி டிவியில் அதிகப்படியான technologyஐப் பயன்படுத்தி கல்வி டிவி மிகச் சிறந்த முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

### கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தவர் கலைஞர்!

அதேபோன்று, பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பற்றிச் சொன்னீர்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடையப் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார். இது வரையில் நான் பெருமையோடு சொல்வேன். கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவிக்கப்பட்ட பிறகு கல்வி வளர்ச்சி நாள் அன்று ஒரு முதலமைச்சர் பள்ளிக்கூடத்திற்கு சென்று மாணவர்களோடு கொண்டாடினார் என்றால், அது முதலமைச்சர் அவர்களாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரில்தான் திருச்சி மாவட்டத்தில் ஒரு மிகப் பெரிய அறிவுசார் நூலகத்தை அமைக்கக்கூடியிருக்கின்றோம் என்பதை நான் பெருமையோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பகுதிநேர ஆசிரியர்களைப் பற்றி சொன்னீர்கள். திராவிட மாடல் ஆட்சி வந்தத்தற்கு பிறகு பகுதிநேர ஆசிரியர்களின் வயது வரம்பை நாங்கள் அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்களுடைய certificate, life time வரைக்கும் செல்லுபடியாகும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்களுக்காக very first time transfer counselling நாங்கள்தான் கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு ரூ.2,500/- கூடுதலாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் முழுநேர ஆசிரியராக எங்களை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து தேர்தல் அறிக்கையிலும் சொல்லியிருக்கிறோம். அதை நாங்கள் மறுக்கவில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நல்ல முடிவை எடுப்பார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நீட்டைப் பற்றி சொன்னீர்கள். நீட்டைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 25 ஆயிரம் மாணவர்கள் apply செய்கிறார்கள். தற்போதுகூட சுமார் 12,361 மாணவர்கள் apply செய்திருக்கிறார்கள். அவர்களை பொறுத்தவரையில் நீட் விலக்கு வேண்டும். அதைச் சார்ந்த சட்டப் போராட்டத்தில் முதலமைச்சர் அவர்களும், அவர்களுக்கு உறுதுணையாக துணை முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள்.

அது தொடர்பாக 85 இலட்சம் கையெழுத்து நாங்கள் வாங்கியிருக்கிறோம். நிச்சயமாக சட்டப் போராட்டத்தில் வெல்வோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதுவரையில் மாணவர்களை confuse செய்துவிடக்கூடாது. மாணவர்கள் அதை சார்ந்திருந்து எதிர்பார்த்து ஏமாந்துவிடக்கூடாது என்கிற விதத்தில். அரசுப் பள்ளியில் இருக்கின்ற ஆசிரியர்களைக் கொண்டு. மாணவர்களுக்கான பயிற்சிகளை தொடர்ந்து நாங்கள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் கூறியதைப்போன்று அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு நிகரான வேறு எந்த ஆசிரியர்களும் வந்து விட முடியாது காரணம் இருக்கிறது. அது என்னவென்றால், நீட் தேர்விற்கான model question bank தயாரிக்கும்போது திட்டத்தட நீட் தேர்வில் முழுமையான மதிப்பெண் 720 என்று நினைக்கிறேன். நீட் தேர்வில் சுமார் 400 மதிப்பெண்களுக்கான வினாக்கள் நம்முடைய ஆசிரியர்கள் உருவாக்குகின்ற question bankலிருந்து வருகிற அளவிற்கு திறமையான ஆசிரியர் பெருமக்களை நாம் பெற்றிருக்கின்றோம்.

அடுத்து, 7.5 சதவிகித இடஒதுக்கீடைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். நேற்று அது சார்ந்து விவாதிக்கப்பட்டது. உள்ளபடியே அது நல்ல திட்டம்தான். 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது மருத்துவம் படிப்பிற்கு மட்டுமல்லாமல். தொழில் படிப்பைச் சார்ந்து படிக்கின்ற அனைவருக்கும் tuition fees இருந்தாலும் சரி, mess fees இருந்தாலும் சரி, counselling fees இருந்தாலும் சரி, counsellingக்கு ஊரிலிருந்து வருகின்ற பேருந்து பயணத்திற்கு ஆகின்ற செலவாக இருந்தாலும் சரி. அந்தச் செலவுகளையும் சேர்த்து தமிழக அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். உணர்வுகளை நாங்கள் மதிக்கின்றோம். இன்றைக்கு கூட எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், மாணவர்களுக்கு சார்ந்த நல்ல திட்டங்களைக் கொண்டுவரும்போது. அதில் கட்சி வேறுபாடு பார்க்காமல்—நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்.

நாங்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தினோம். அதனால்தான் வந்ததா என்று நீங்கள் எல்லோரும் எடுத்துப் பேசினீர்கள். ஓர் உணர்ச்சியோடு நான் சொல்ல வேண்டும் என்றால், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய அன்பு மகன். திரு. அன்புமகன் அவர்கள். அவருக்கு வயது 35. 17102020 அன்று மறைந்து போனார். அந்தக் கலக்கத்தில் இருந்த தந்தை. ஆனால். 7 நாட்களில். 24 ஆம் தேதி அதற்கான ஆர்ப்பாட்டத்தை. போராட்டத்தை தலைவர் அறிவிக்கலாம் என்று சொன்னபோது. என்னுடைய ஒரு மகன் இறந்துவிட்டான் சரி. இந்த ஏழை பழக்கும் அத்தனை மாணவர்களும் என்னுடைய பிள்ளைகள்தான் என்று சொல்லி. அதற்காக இந்தப் போராட்டத்தை நடத்திக் காட்டுவேன் என்று தலைவருடைய ஆணையை ஏற்று போராட்டத்தை நடத்திக் காண்பித்தவர்தான் இங்கு அமர்ந்திருக்கின்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள். அதனால் தான். அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் தற்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இங்கு அமர்ந்திருக்கிறார். அன்றைக்கு இந்தப் போராட்டத்தை தலைமையேற்று நடத்திய தமிழ்நாட்டின் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறார். எங்களுக்கும் உணர்வுகள் புரியும். இதையெல்லாம் சொல்வில்லை. மாணவர்கள் சார்ந்து என்று வருகின்றபோது அனைவரும் சேர்ந்துதான். உங்களால் வந்ததா அல்லது எங்களால் வந்ததா என்று இருக்காமல் மாணவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஏன் நமது துணை முதலமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட credit நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். எப்படியாவது நீட்டிற்கு விலக்கு வாங்கிக் கொடுங்கள். அந்த credit நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லித அளவிற்குதான் நாங்கள் இருந்திருக்கிறோம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே போன்று பல திட்டங்களுக்கு நீங்கள் பெயரை மாற்றியிருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். கடந்த 4 வருடங்களில் 67 வகையான திட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். என்னென்ன திட்டங்கள் என்று பதிலுரையாற்றுகின்றபோது நான் கோடிட்டு சொல்கிறேன். இப்போது நேரமில்லை. 67 திட்டங்களையும் நாங்கள் புதிதாக கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மறைமுககின்ற வகையில் என்னுடைய பதிலுரை அமையும் என்பதை இந்தநேரத்தில் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக. சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

## குடிமைப் பணி தேர்வுக்குத் தயாராகும் 500 மாணவர்கள் தங்கிப் பயில – சென்னை

# செனாய் நகரில் ரூ.40 கோடியில் நவீன பயிற்சி மையம்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப்.26-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன் "நான் முதல்வன்" திட்டம் குறித்துப் பாராட்டிப் பேசியதையடுத்து, அகில இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே,

இங்கே எனக்கு முன்பு உறுப்பினர் தம்பி வெற்றி அழகன் அவர்கள் மிக அழகாக, நிதானமாக பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்து உரையாற்றியிருக்கிறார். அவர் பேசுகிறபோது, நான் முதல்வன் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி, சில விவரங்களையெல்லாம் தெரிவித்தார்; சில விளக்கங்களைக் கேட்டார். எனவே, அதையொட்டி நான் சில செய்திகளை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மாணவர்களின் திறனை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம்தான் 'நான் முதல்வன்' திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் விளைவாக, தற்போது வெளியான அகில இந்திய குடிமைப் பணி தேர்வு முடிவுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆம் ஆண்டு வரை, ஒவ்வொரு ஆண்டும் அதிகமான தமிழ்நாட்டு மாணவர்கள் குடிமைப் பணி தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை மாறி

2021ல் வெறும் 27 மாணவர்கள் மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதை கவனத்தில் வைத்து, நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது.

குடிமைப் பணி தேர்வுக்குத் தயாராகக் கூடிய ஆயிரம் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாதம் 7500 ரூபாய் வீதம் பத்து மாதங்களுக்கு வழங்கினோம். மேலும், முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு ரொக்கமாக 25 ஆயிரம் ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கினோம். அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் 'அகில இந்திய குடிமைப் பணி தேர்வு மையத்தின்' மூலமாக இந்த மாணவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன.

நாம் மேற்கொண்ட தீவிரமான முயற்சிகளின் பயனாக, இந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து 57 மாணவர்கள் பல்வேறு அகில இந்தியப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், இவர்களில் 50 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்றுப் பயனடைந்திருக்கக்கூடியவர்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

'நான் முதல்வன்' திட்டத்தின் போற்றத்தக்க இந்த வெற்றியினை நாம் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், தேர்வில் வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த வேண்டும். அதற்காக சென்னையில் இருக்கக்கூடிய செனாய் நகர் பகுதியில் 500 மாணவர்கள் தங்கிப் பயிலக்கூடிய வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி மையம் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை தங்கள் வாயிலாக இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நிகழ்ச்சியினை நாளை மறுதினம் அவர்கள் பயிற்சி பெற்ற அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வளாகத்தில் நடத்திடவும், அதில் நான் கலந்துகொள்ளவும் இருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைக்கோடித் தமிழ் இளைஞர்களின் கனவுகளையும் நனவாக்குவதே இந்த திராவிட மாடல் அரசின் முழுமுதற் கடமை! (மேசையைத் தட்டும் ஒலி) அதனை தொடர்ந்து செய்வோம் என்ற உறுதியினை அளித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## நெய்வேலி நிலக்கரி நிறுவன - தொ.மு.ச.வை

# தனிப் பெரும் சங்கமாக உருவாக்க வாக்களிப்பீர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஏப்.26-**

**நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் நடைபெற இருக்கின்ற இரகசிய வாக்கெடுப்பில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை எண்.6-இல் வாக்களித்துத் தனிப்பெரும் சங்கமாக உருவாக்கித் தர வேண்டும் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

என்.எல்.சி. உடன்பிறப்புகளே!

நிறுவனத்தில் பணியாற்றும் எனது அன்பு அருமைத் தோழர்களே! இனிய நண்பர்களே! அனைவருக்கும் உங்களில் ஒருவன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அன்பு வணக்கங்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்.எல்.சி. பொதுத்துறை நிறுவனத்தில் நடைபெறுகின்ற சங்க அங்கீகாரத்திற்கான இரகசிய வாக்கெடுப்புத் தேர்தல் நாளை நடைபெற உள்ளது!

ஒன்றிய அரசுகள் என்.எல்.சி. பங்குகளை விற்றுத் தனியார்மயத்தைப் புகுத்த முயற்சித்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக அது தடுக்கப்பட்டு இன்றளவும் இந்தியாவிலேயே அதிக ஊதியம் பெறக்கூடிய தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய பொதுத்துறை நிறுவனமாக என்.எல்.சி. நிறுவனம் விளங்குகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்!

கடந்த தேர்தல்களில் பெரும்பான்மையான தொழிலாளர்களின் வாக்குகளோடு நமது தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் முதன்மைச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல்வேறு நலப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி உள்ளதை நீங்கள் அறிவீர்கள்!

குறிப்பாக கொரோனாவால் உயிரிழந்த குடும்பங்களின் 124 வாரிசுகளுக்கு வேலை பெற்றுக் கொடுத்திருக்கிறோம் !

ஒப்பந்த தொழிலாளர்களாகப் பணியாற்றிய 3154 தொழிலாளர்களை சொசைட்டி தொழிலாளர்களாகவும், சொசைட்டி தொழிலாளர்களாக இருந்த 2173 தோழர்களை நிரந்தரத் தொழிலாளர்களாகவும், டிப்ளமோ மைனிங் முடித்த

180 இளைய தோழர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்ய வைத்திருக்கிறோம்.

உலகம் முழுவதும் நிரந்தரப் பணியாளர்களை ஒப்பந்த தொழிலாளர்களாக மாற்றுகிற தருணத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தொடர் முயற்சியின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரமாக்கிய சாதனைகளைப் படைத்ததுதான் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்.

தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு மற்றும் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை, சிறந்த பதவி உயர்வு வாய்ப்புகள், பாதுகாப்பான பணிச் சூழல் இவற்றை உறுதி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் நம்முடைய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்திற்கு உண்டு!

எனவே 2027-இல் நடைபெற இருக்கின்ற ஊதியமாற்று ஒப்பந்தத்தில் மேற்கண்ட முக்கியக் கோரிக்கைகளை வென்றெடுக்கத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் இந்த இரகசிய வாக்கெடுப்பில் தனிப்பெரும் சங்கமாக வர வேண்டியது காலத்தின் கட்டாயம்!

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்" - என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப,

கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கமும் ஆற்றி இருக்கக்கூடிய எண்ணில் அடங்கா நலப் பணிகளைக் கருத்தில் கொண்டு 25.04.2025 அன்று நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் நடைபெற இருக்கின்ற இரகசிய வாக்கெடுப்பில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை எண்.6-இல் வாக்களித்துத் தனிப்பெரும் சங்கமாக உருவாக்கித் தர வேண்டும் என்று உங்களில் ஒருவனான நான் உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் – சட்டப்பேரவையில் அறிவித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கம் வரவேற்பு!

## சங்கத்தின் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை ஏப்:26-

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை வருமாறு;

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் மாற்றுத் திறனாளிகள் என்ற துறையை உருவாக்கி லட்சக்கணக்கான மாற்றுத் திறனாளிகளுக்கு இன்று தொடக்க கல்வி முதல் உயர் கல்வி வரை பயிலக்கூடிய வாய்ப்பையும் தந்து கல்விக் கட்டணம் ரத்து,சிறப்பு கட்டணம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவித்து இன்று சுயமரியாதையோடு சமூகத்தில் அனைத்து மாற்றுத்திறனாளிகளும் கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறியுள்ளதற்கு தலைவர் கலைஞரின் பொற்கால ஆட்சியே காரணம் என்பதை இந்த நேரத்தில் நன்றியுணர்வோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சர் பணி, 13 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்த கலைஞரின் சாதனைகள் எண்ணிலடங்கா. இத்தனை பணிகளுக்கிடையே அவர் எழுத்துப் பணியையும்,நாடகம், திரைப்படம், இலக்கியம்,ஊடகம், சின்னத்திரை, அரசியல் களம் என அவர் தொடாத துறையே இல்லை எனலாம்.

தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்களை காட்டிலும் கல்வித்துறையில் பல்வேறு சாதனைகள் புரிவதற்கு தலைவர் கலைஞரின் ஆட்சியை காரணம் என்பதற்கு மறுக்க இயலாது. ஆசிரியர் நியமனம் தொடங்கி பள்ளிகள் உள் கட்டமைப்பு வரை பல்வேறு வகையான நலத்திட்டங்களை பள்ளிகளில் செயல்படுத்தி இந்தியாவிற்கு தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்க கலைஞரின் பொற்கால ஆட்சியை காரணமாகும்.

தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் தான் பள்ளிக்கல்வித்துறை, உயர்கல்வித்துறை என இரண்டு துறைகள் உருவாக்கப்பட்டு இன்று தனித்தனி துறைகளாக செயல்பட்டு வருகிறது. கல்வித்துறையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தின் கல்வித்தரம் மிக உயர்ந்த நிலையில் உள்ளது.

சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெயரில் இந்தியாவிலேயே முதல் முறையாக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பல்கலைக் கழகம் அமைத்தவரும் கலைஞர் அவர்கள் தான்.

அதுமட்டுமல்லாமல் கல்வி துறையில் பாரதிதாசன் பல்கலைக் கழகம், மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக் கழகம், ஆசியாவிலேயே முதன்முறையாக கால்நடைப் பல்கலைக்கழகம் ஆகிய உயர் கல்வி நிறுவனங்களை அமைத்துக் கல்விப் புரட்சி செய்ததும் கலைஞரின் மாபெரும் சாதனைகளாகும்.

கலைஞரின் வழித்தோன்றலில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்தில் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என அறிவித்தமைக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்களுக்கும் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ரெ. தங்கம் தெரிவித்துள்ளார்

# அரசியல் காழ்ப்புணர்ச்சி பற்றி அ.தி.மு.க.வினர் பேசலாமா?

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கோவி. செழியன் சாடல்!



**சென்னை,ஏப்.26-**

***சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், அ.தி.மு.க. உறுப்பினர் பாலக்கோடு கே.பி. அன்பழகன், "உயர்கல்வி மற்றும் பள்ளிக்கல்வி" மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறுக்கிட்டு ஆதாரங்களுடன் விளக்கமளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், "காழ்ப்புணர்ச்சி பற்றி அ.தி.மு.க. வினர் பேசலாமா? எனக் கடுமையாகச் சாடினார்.***

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏதோ காழ்ப்புணர்ச்சியாக செயல்படுகிறது; முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பெயரில் இருந்த, விழுப்புரம், கடலூர் மாவட்ட மாணவர்கள் பயன்பெற்ற பல்கலைக்கழகத்தை, கல்லூரியை இணைத்துவிட்டார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே இன்றைக்கு செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்களின் பெயரில், முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பெயரில், இசைப் பல்கலைக்கழகம் இருக்கிறது; மீன்வள பல்கலைக்கழகம் இருக்கிறது. அதற்குப் பெயர் ஒப்புதல்கூட தராமல், உங்கள் ஆட்சியில் போடப்பட்ட தீர்மானம் மேதகு Governor அவர்கள் மாளிகையில் உறங்கியது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்தான் உரிமைப் போராட்டம் நடத்தி அதைப் பெற்றுத் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் உறுப்பினர் அவர்கள், இதில் எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லை.

நான், முதலாம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக 2011 ஆம் ஆண்டு கன்னிப் பேச்சு பேசும்போது-இராணி மேரி கல்லூரியை மீட்ட தலைவர் இந்நாள் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய தினம் தலைமைச் செயலகம் கட்ட வேண்டுமென்று முடிவெடுத்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, இடிக்கும் நிலை ஏற்பட்டபோது போராடியதன் காரணமாக திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் 11 பேர் அன்றைக்கு கடலூர் சிறையில் இருந்தார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட அன்றைக்குச் சிறையில் இருந்தார். நான் சொல்ல வருகிற செய்தி, விரும்பி கலைஞர் அரங்கம் என்று ஓர் அரங்கத்தைக் கட்டினார்கள். கடற்கரை சாலைக்குச் சென்று பார்த்தால் கலைஞர் அரங்கம் என்று ஓர் அரங்கம் இருக்கும். ஆட்சி மாறியது, அந்த 'ஞர்' என்ற எழுத்து காணாமல்போய் வெறும் கலை அரங்கமாக இருந்தது. முதலமைச்சராக அம்மையார் அவர்கள் இருந்தார்கள். நான் கன்னிப்பேச்சு பேசும்போது சொன்னேன், கலைஞர் அரங்கம் என்பதை மாற்றிவிட்டு வெறும் கலை அரங்கமாக இருக்கிறதே! கலைஞர் என்றால் கசக்கிறதா? அந்தக் கல்லூரியில் இருந்த பெயரை ஏன் எடுத்தீர்கள் என்று கேட்டேன். கடைசி வரை கலைஞர் பெயர் வைக்கவில்லை.

மற்றொரு செய்தி, கடந்த காலங்களில் ரூ.18 கோடி செலவில், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் படம் பொறிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் பை, புத்தகப் பை இருந்தது. காழ்ப்புணர்ச்சி இல்லாத அரசு கழக அரசு என்பதற்காக இதைச் சொல்கிறேன். முன்னாள் அமைச்சர் அவர்களின் பேச்சில் குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை. அப்போது இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்களிடம் கருத்து கேட்டார்கள், துணை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டார்கள், அப்போது சொன்னார்கள் ஏழை எளிய மக்கள் தருகிற வரிப் பணத்தை வீணடிக்கக்கூடாது.

அம்மையார் அவர்களின் படம் இருந்தாலும் கவலை இல்லை, அதைத் தர வேண்டும் என்று சொன்ன தலைவர், நம்முடைய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக, நாங்கள் வண்ணத் தொலைக்காட்சி வழங்கினோம், அதில் கலைஞர் அவர்களின் படம் இருந்தது. வண்ணத் தொலைக்காட்சி வழங்கினோம், கலைஞர் அவர்களின் படம் இருந்தது. எனவே, சில ஒன்றியங்களில் அவை வழங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஊராட்சி ஒன்றிய godown-ல் அவை இருந்தன. ஆட்சி மாறிய பிறகு, அதை வழங்குங்கள் என்று சொன்ன போது, கலைஞர் அவர்களின் பெயர் இருந்த காரணத்தால் வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்படாமல் godown-ல் பூட்டி வைத்ததும் கடந்த ஆட்சிதான் என்பதை நினைத்து, காழ்ப்புணர்ச்சி பற்றி பேசுவதற்குரிய உரிமை உறுப்பினர் அவர்களுக்கும், இயக்கத்திற்கும் உண்டா! காழ்ப்புணர்ச்சியைக் கடந்த தலைவர் எங்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் என்பதைப் பணிவோடு பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் குறிப்பிட்டார்.